# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 09.09 .2021-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 55–தனியார் தூய்மைப் பணியாளர்களை கொண்டு இந்நகர பொது சுகாதாரப் பணிகளில் ஒப்பந்தபுள்ளி அடிப்படை விலைவிகிதத்தில் ஈடுபட்டு வருவதில் 30.08.2021–ஆம் நாளில் நீடித்த ஒப்பந்தப்புள்ளி முடிவடைகிறது. எனவே, ஒப்பந்ததாரர் நிர்ணயம் செய்வதில் நிர்வாக ரீதியாக காலதாமதம் ஆகும் என்பதால் பொது சுகாதாரப் பணிகள் மற்றும் நிர்வாக நலன் கருதி பொது மக்களுக்கு எவ்வித பாதிப்புகள் எற்பாடா வண்ணம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தோய்வு எற்படாமல் இருக்க தொடர்ந்து தற்போதுள்ள 55–தனியார் தூய்மைப் பணியாளர்களை 01.09.2021 முதல் 30.11.2021 வரையிலான நாட்களுக்கு அதே ஒப்பந்த விலைவிகிதத்தில் ஒரு தூய்மைப் பணியாளருக்கு ஒரு நாள் தினக்கூலியான ரூ.295/– இத்துடன் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ரூ.40.14, தொழிலாளர் மருத்துவ காப்பீடு ரூ.13.59 மற்றும் சீருடைகள் நிர்வாக செலவினங்கள் ரூ.17.00–ஆக மொத்த தொகை ரூ.365.73 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இத்தொகையினையே மேலும் மூன்று மாதங்களுக்கு 55–தூய்மைப் பணியாளர்களின் மாத ஊதியத்தினை ஒப்பந்த நிறுவனமான எல்.டி. மேன்பவர் சொலுசன், வேலூர் என்பவருக்கு வழங்க தோரயச் செலவினத் தொகை ரூ.18.72 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் புதிய ஒப்பந்தபுள்ளிகள் கோரி நடவடிக்கைகள் எடுக்கும் வரை தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிறுவனமான எல்.டி. மேன்பவர் சொலுசன், வேலூர் என்பவர் மூலம் 55–தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து வழங்க நிர்வாக நலன் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காத வகையில் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் மூன்று மாதங்களுக்கு கால நீடிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றபொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) 55–தனியார் தூய்மைப் பணியாளர்களின் தினக்கூலியினை மாத ஊதியமாக வழங்க செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2626/2017/எச்1

**தீர்மான எண்.163, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்உறிஞ்சு கிணறுகளுக்கும் நீர்சேகரிப்பு கிணறுகளுக்கு இடையே இணைக்கப்பட்டுள்ள பைப்லைன் மற்றும் கேபிள்கள், பழுதுபார்த்து சீரமைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் ரூ. 94,956/- செலவினத்தில் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.164, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.03**) இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு புதிதாக மாவு அரைக்கும் கிரைண்டர் இயந்திரம் சப்ளை செய்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் ரூ. 29,800/- செலவினத்தில் அன்பு எலக்ட்ராணிக்ஸ், ஆற்காடு மூலம் கிரைண்டர் இயந்திரம் வாங்கி பணி முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு:- மன்றம் பதிவுசெய்யலாம்.

தீர்மான எண்.165, பதிவுசெய்யப்பட்டது

ஆற்காடு
நாள்.09.09.2021

ஆணையாளர்(கூ.பொ)
ஆற்காடு நகராட்சி